www.xtrapapers.com

N17/2/ABTAM/SP2/TAM/TZ0/XX/M

Diploma Programme
Programme du diplôme
Programa del Diploma

# Marking notes
# Remarques pour la notation
# Notas para la corrección

## November / Novembre / Noviembre 2017

## Tamil B / Tamoul B / Tamil B

## Standard level
## Niveau moyen
## Nivel medio

## Paper / Épreuve / Prueba 2

12 pages/páginas

www.xtrapapers.com



These marking notes are the property of the International Baccalaureate and must **not** be reproduced or distributed to any other person without the authorization of the IB Global Centre, Cardiff.

Ces remarques pour la notation sont la propriété du Baccalauréat International. Toute reproduction ou distribution à de tierces personnes sans l'autorisation préalable du centre mondial de l'IB à Cardiff est **interdite**.

Estas notas para la corrección son propiedad del Bachillerato Internacional y no deben reproducirse ni distribuirse a ninguna otra persona sin la autorización del centro global del IB en Cardiff.

www.xtrapapers.com



**ஆதாரக்கூறு A: மொழி**

- How effectively and accurately does the student use language?

| Marks | Level descriptor |
|---|---|
| **0** | The work does not reach a standard described by the descriptors below. |
| **1–2** | **Command of the language is generally inadequate.**<br>A very limited range of vocabulary is used, with many basic errors.<br>Simple sentence structures are rarely clear. |
| **3–4** | **Command of the language is limited and generally ineffective.**<br>A limited range of vocabulary is used, with many basic errors.<br>Simple sentence structures are sometimes clear. |
| **5–6** | **Command of the language is generally adequate, despite many inaccuracies.**<br>A fairly limited range of vocabulary is used, with many errors.<br>Simple sentence structures are usually clear. |
| **7–8** | **Command of the language is effective, despite some inaccuracies.**<br>A range of vocabulary is used accurately, with some errors.<br>Simple sentence structures are clear. |
| **9–10** | **Command of the language is good and effective.**<br>A wide range of vocabulary is used accurately, with few significant errors.<br>Some complex sentence structures are clear and effective. |

**விளக்கம்**

**சொல் எண்ணிக்கை**
பொது மொழி நிலையில், மாணவர்கள் குறைந்தது 250 சொற்களில் எழுத வேண்டும். குறைந்தளவு சொற்களில் தங்கள் எழுத்துப்படைப்பை எழுத இயலாதவர்களுக்கு (**1 மதிப்பெண்**) ஆதாரக்கூறு A-யின்கீழ் கழிக்கப்படும். முழுப் பனுவலின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**மொழி**
எல்லாப் பிழைகளும் ஒரே விதமான முக்கியத்துவத்தைப் பெறுவதில்லை, என்பதைத் தேர்வாளர்கள் மனத்தில் கொள்ள வேண்டும். சில தவறுகள் சொல்லவரும் கருத்துகளைப் பெருமளவில் சிதைப்பதாக அமையக்கூடும், மாறாகச் சில விதமான கருத்துகள் அவ்வாறு அமைவதில்லை. மேலும், சில வகைப் பிழைகள் அடிப்படை மொழி இயலாமையைக் குறிப்பதாக இருக்கும், மற்றச் சில கவனச்சிதறலால் ஏற்பட்டதாக இருக்கும்.

**இடறல்கள்** – எல்லாக் கடினத்தன்மை நிலைகளிலும் கவனக்குறைவால் அவ்வப்போது ஏற்படும் சிறு தவறுகள் – எ-டு மாணவர் வழக்கமாக இறந்தகால அமைப்புகளைச் சரிவர எழுதுவார். ஆனால், சிலபோது கவனக்குறைவால் இறந்தகால இடைநிலைகளை மாற்றி எழுதுதல்.

www.xtrapapers.com



**தவறுகள்** – அடிக்கடி செய்யும் பிழைகள், குறிப்பாக மொழி அமைப்புகளில் – எ-டு இறந்தகால அமைப்புகள் இயல்பாகச் சரியாக இருந்தாலும், மிகப் பொருத்தமாக அமையாதிருத்தலும், அடிப்படையான நிலைகளில் குழப்பம் ஏற்படுதல் (எ-டு இறந்தகாலமும் இறந்தகால நிறைவும்).

**விடுபடும் கூறுகள்** – பொருத்தமில்லாத மொழி அமைப்புகளும், இடம்பெறாதவைகளும் – எ-டு இறந்தகாலம் வரும் இடங்களில் அவை இடம்பெறாதிருத்தல்.

www.xtrapapers.com



## ஆதாரக்கூறு B: செய்தி

- How clearly can the student develop and organize relevant ideas?

| Marks | Level descriptor |
|---|---|
| **0** | The work does not reach a standard described by the descriptors below. |
| **1–2** | **The message has not been communicated.**<br>The ideas are irrelevant and/or repetitive.<br>The development of ideas is unclear; supporting details are very limited and/or not appropriate. |
| **3–4** | **The message has barely been communicated.**<br>The ideas are sometimes irrelevant and/or repetitive.<br>The development of ideas is confusing; supporting details are limited and/or not appropriate. |
| **5–6** | **The message has been partially communicated.**<br>The ideas are relevant to some extent.<br>The development of ideas is evident at times; supporting details are sometimes appropriate. |
| **7–8** | **The message has been communicated fairly well.**<br>The ideas are mostly relevant.<br>The development of ideas is coherent; supporting details are mostly appropriate. |
| **9–10** | **The message has been communicated well.**<br>The ideas are relevant.<br>The development of ideas is coherent and effective; supporting details are appropriate. |

**Clarification**

For the **9-10 mark band**, all aspects listed below are expected to be present. The response should also be COHERENT and EFFECTIVE. Scripts should be marked proportionately lower to the degree to which they fail to meet these requirements.

**NOTE:** When marking candidate responses, keep in mind that neither the **accuracy** of the information presented, nor the **validity** of the candidates' personal opinions, are being assessed. Therefore, scripts that are factually inaccurate should not be marked down, provided they meet the requirements of the task, and the ideas are sufficiently developed.

www.xtrapapers.com



வினா **1**:

அண்மையில் இந்திய நாட்டில் அதிகம் தமிழ் பேசப்படும் பகுதியைச் சார்ந்த கிராமத்திற்கு நீ பயணம் மேற்கொண்டிருந்தாய். அங்கிருந்த மக்களின் வாழ்க்கைமுறை நகர்ப்புறத்தில் வாழ்வோரிடமிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது. பயணத்தின் போது கிராமத்தில் பெற்ற அனுபவம் குறித்தும், மக்களின் வேறுபட்ட பழக்க வழக்கங்கள் குறித்தும், வாழ்க்கைமுறை குறித்தும் வலைப்பதிவு ஒன்றை வெளியிடுகிறாய்.

---

வினாவினை ஒட்டித் தேர்வு எழுதுவோர்:

- வினாவில் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான பதிலை எழுதுதல் வேண்டும்: கிராமத்திற்கு வருகை மேற்கொண்டிருத்தல் (தமிழ் பேசப்படும் பகுதியைக் கொண்ட நாட்டிற்கு)
- கிராமத்தில் வசிக்கும் மக்களின் வாழ்கைமுறை பெரும்நகரத்தில் வாழ்வோரின் வாழ்க்கையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை மையக் கருத்தாகக் கொண்டிருத்தல்.
- கேட்கப்பட்டுள்ள தலைப்பில் குறிப்பிட்ட அளவு தகவலளித்தல்: வாழ்க்கைமுறையிலும் பழகுமுறையிலும் கொண்டுள்ள வேறுபாடுகளை வகைப்படுத்திக் காட்டுதல் அல்லது இருவகை மக்களிடையே உள்ள அடிப்படை வேறுபாட்டை ஆழமாக ஆராய்தல்.
- கருத்துகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் மற்றும் அல்லது சான்றாதாரங்களையும் தருதல்.
- தெரிவிக்கும் கருத்துகளின் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற அமைப்புமுறையை உருவாக்குதல், (எ-டு) பத்தி பிரித்தலும் அல்லது இணைப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

www.xtrapapers.com



வினா **2**:

உள்ளூர்ச் செய்தித்தாள் ஒன்று "உலகத்தின் மரபும் பழக்கங்களும்" என்னும் கருப்பொருளில் ஒரு சிறப்பு வெளியீடு ஒன்றை வெளியிட விரும்புகிறது. அண்மையில் தமிழ் பேசப்படும் நாட்டில் நீண்ட காலம் தங்க நேர்ந்தது. அப்போது அந்நாட்டில் உன்னை மிகவும் ஈர்த்த மரபு சார்ந்த பழக்கவழக்கங்கள் குறித்த உன் அனுபவத்தைப் பற்றிப் பகிர்ந்துகொள்ள எண்ணுகிறாய். இதை விளக்கி ஒரு செய்திக் கட்டுரை எழுது.

---

வினாவினை ஒட்டித் தேர்வு எழுதுவோர்:

- வினாவில் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான பதிலை எழுதுதல் வேண்டும்: தமிழ் பேசும் நாட்டில் நீண்ட காலம் தங்கியதில் பெற்ற அனுபவங்கள்.
- அதிகம் ஈர்த்த ஒரு மரபுநிலைப் பாரம்பரியத்தை மையமாகக் கொண்டிருத்தல்
- கேட்கப்பட்டுள்ள தலைப்பில் குறிப்பிட்ட அளவு தகவலளித்தல்: பெற்ற அனுபவத்தையும் அதனையொட்டிய எண்ண அலைகளையும் குறித்து விரிவான விளக்கம் அல்லது ஏதேனும் ஒன்றில் ஆழமான பார்வை கொண்டு விளக்குதல்
- கருத்துகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் மற்றும் அல்லது சான்றாதாரங்களையும் தருதல்.
- தெரிவிக்கும் கருத்துகளின் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற அமைப்புமுறையை உருவாக்குதல், (எ-டு) பத்தி பிரித்தலும் அல்லது இணைப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

www.xtrapapers.com



வினா **3**:

நீ வாழும் நகரத்தில் குளிர்காலப் பருவத்தில் பயங்கரமான சளிக்காய்ச்சல் தொற்றுநோய்பரவும் நிலை உருவாகியுள்ளது. இது குறித்து நீ மிகவும் கவலை கொள்கிறாய். உன் சக மாணவர்களிடம் விநியோகம் செய்ய நீ ஒரு சுற்றறிக்கை ஒன்றைத் தயார் செய்கிறாய். அதில் இந்தச் சளிக்காய்ச்சல் தொற்றுநோயால் விளையக்கூடிய பாதிப்புகளை விளக்கியும், அதிலிருந்து எவ்வாறு ஒருவர் தம்மையும் மற்றவர்களையும் தற்காத்துக்கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியும் விளக்கமளிக்கிறாய்.

---

வினாவினை ஒட்டித் தேர்வு எழுதுவோர்:

- எதிர்பார்க்கும் பெறுநரைத் தொடர்படுத்தும் உள்ளடக்கம்/தகவல் கொண்டு ஏற்புடைய விடையைத் தயாரித்தல் (சக மாணவர்கள்)
- விரைவில் தாக்கக்கூடிய சளிக்காய்ச்சல் தொற்றுநோய்க் கிருமியை மையமாகக் கொண்டிருத்தல்
- பணியின் இரு கூறுகள் குறித்தும் விளக்கியிருத்தல் : அது குறித்த ஆபத்துகள் குறித்துக் கவனத்தை ஈர்த்தலும் மற்றும் அதிலிருந்து ஒருவர் தம்மையும் பிறரையும் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம்
- கருத்துகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் மற்றும் அல்லது சான்றாதாரங்களையும் தருதல்.
- தெரிவிக்கும் கருத்துகளின் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற அமைப்புமுறையை உருவாக்குதல், (எ-டு) பத்தி பிரித்தலும் அல்லது இணைப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

www.xtrapapers.com



**வினா 4**:

இப்போது அதிக வரவேற்பைப் பெற்றுவரும் ஒரு தொலைக்காட்சித் தொடரை நீ தொடர்ந்து பார்த்து வருகிறாய். இந்தத் தொடரைப் பற்றிய சாதகங்களையும் பாதகங்களையும் விளக்கி உன் பள்ளிச் செய்திக்கடிதத்திற்கு ஆய்வுக் ஒன்றை எழுது.

---

வினாவினை ஒட்டித் தேர்வு எழுதுவோர்:

- வினாவில் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான பதிலை எழுதுதல் வேண்டும்: தற்போது மிகப் பிரபலமாக இருக்கும் ஒரு தொலைக்காட்சித் தொடர்
- தொலைக்காட்சித் தொடர் குறித்த மனநிலையும் எண்ணங்களையும் மையமாகக் கொண்டிருத்தல்
- பணியின் இரு கூறுகளையும் விளக்கியிருத்தல்: தொடரின் குறை நிலைகள் குறித்துக் கருத்துரைத்தல்
- கருத்துகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் மற்றும் அல்லது சான்றாதாரங்களையும் தருதல்.
- தெரிவிக்கும் கருத்துகளின் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற அமைப்புமுறையை உருவாக்குதல், (எ-டு) பத்தி பிரித்தலும் அல்லது இணைப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

www.xtrapapers.com



**வினா 5**:

இன்றைய சூழலில் கணினி, இணையம், கைபேசி முதலான தகவல் தொழில்நுட்பக் கருவிகளின்றி நம்மால் வாழ முடிவதில்லை. ஒரு சோதனை முயற்சியாகத் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தாமல் ஒரு நாள் முழுதும் இருந்தாய். அந்த அனுபவம் குறித்தும் கற்றுக்கொண்ட படிப்பினை குறித்தும் விளக்கி நாட்குறிப்பில் உன் எண்ணங்களைக் குறிப்பிடுகிறாய்.

---

வினைவினை ஒட்டித் தேர்வு எழுதுவோர்:

- வினாவில் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான பதிலை எழுதுதல் வேண்டும்: இன்றைய சூழலில், தகவல் தொழில்நுட்பம் இல்லாமல் நம்மால் வாழ இயலாது என்னும் எண்ணப்போக்கு

- ஒருநாள் தகவல் தொழில்நுட்பம் இன்றி இருத்தலை மையமாகக் கொண்டிருத்தல்

- பணியின் இரு கூறுகளையும் விளக்கியிருத்தல்: ஒருநாளில் பெற்ற அனுபவம் பற்றியும் மற்றும் அதிலிருந்து கற்றுக்கொண்டவை பற்றியும்
- கருத்துகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் மற்றும் அல்லது சான்றாதாரங்களையும் தருதல்.

- தெரிவிக்கும் கருத்துகளின் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற அமைப்புமுறையை உருவாக்குதல், (எ-டு) பத்தி பிரித்தலும் அல்லது இணைப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

www.xtrapapers.com



**ஆதாரக்கூறு C: அமைப்பு**

- How correctly does the student produce the required text type?
- To what extent are the conventions of text types appropriate?

| Marks | Level descriptor |
|---|---|
| **0** | The work does not reach a standard described by the descriptors below. |
| **1** | **The text type is not recognizable.**<br>Conventions appropriate to the text type are not used. |
| **2** | **The text type is hardly recognizable or is not appropriate.**<br>Conventions appropriate to the text type are very limited. |
| **3** | **The text type is sometimes recognizable and appropriate.**<br>Conventions appropriate to the text type are limited. |
| **4** | **The text type is generally recognizable and appropriate.**<br>Conventions appropriate to the text type are evident. |
| **5** | **The text type is clearly recognizable and appropriate.**<br>Conventions appropriate to the text type are effective and evident. |

முழுமதிப்பெண்கள் **[5]** பெறுவதற்கு, குறியிடப்பட்ட மரபுநிலைகள் நிறைவு பெற்றிருத்தல். **[3]** மதிப்பெண்கள் பெறுவதற்கு, பாதிக்கும் மேலான மரபுநிலைகள் நிறைவு பெற்றிருத்தல்.

**குறிப்பு:** ஆதாரக்கூறு C என்பது திருத்தப்பணியின் குறிப்புகளே அன்றி விடைக்குறிப்புகள் அன்று என்பதனைத் தேர்வாளர் நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.. ஆதலின், கொடுக்கப்பட்டுள்ள திருத்தப்பணிக் குறிப்புகளில் பாதி அளவே வெளிப்பட்டிருந்தால் (எ-டு - பொருத்தமான உரைக்குறிகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பினும், எல்லா இடங்களிலும் இல்லாதபோது, சான்றுக்கு, முகமன் தெரிவிக்கப்பட்டு, ஆனால், நிறைவில் அது இல்லாதிருத்தல்) அதற்கும் சாதகமான நிலையில் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். அத்தகைய தருணங்களில், தேர்வாளர்கள் அப்பணியை ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள கூறுகளுக்கேற்ப இறுதி மதிப்பெண்களைத் தக்கவாறு நிபுணத்துவ நிலையில் முடிவெடுக்க வேண்டும்.

பனுவல் வகையில் எதிர்பார்க்கப்படும் மரபுநிலைகள் என்பன:

**வினா 1:** வலைப்பூ

- ஓரளவுக்கு முறைசார்ந்தது முதல் முறைசாரா மொழிப்பதிவைக் கையாளுதல்
- பதிவுக்கு ஆர்வமூட்டும் தலைப்பு இட்டிருத்தல்
- தன்மை நிலையில் எடுத்துரைத்தல்
- வாசகரைப் பற்றிய தெளிவு கொண்டிருத்தல், (எ-டு) நேரடி உரை, ஆர்வமூட்டும் மொழிநடை, கருத்துகளை வரவேற்றல்.
- பொருத்தமான முறையில் பதிவை நிறைவு செய்திருத்தல்

www.xtrapapers.com



**வினா 2:** செய்திக் கட்டுரை

- ஓரளவுக்கு முறைசார்ந்தது முதல் முறைசார்ந்த மொழிப்பதிவைக் கையாளுதல்
- பொருத்தமான கூருணர்வும் நோக்கும் கொண்ட மொழித் தொனியைக் கொண்டிருத்தல்
- பொருத்தமான தலைப்போ/தொடரோ கொண்டிருத்தல்
- வாசகரைப் பற்றிய தெளிவு கொண்டிருத்தல்
- ஆர்வமூட்டும் தொடக்கமும், வளர்ச்சியும் முடிவுரையும் கொண்டிருத்தல்

**வினா 3:** சுற்றறிக்கை

- ஓரளவுக்கு முறைசார்ந்தது முதல் முறைசார்ந்த மொழிப்பதிவைக் கையாளுதல்
- கவனத்தை ஈர்க்கும் தலைப்பிடுதல்
- அளவான முன்னுரையும் முடிவுரையும் கொண்டிருத்தல்
- அமைப்புக் கூறுகளைக்கொண்டு கருத்துகளை வெளியிடல், (எ-டு) துணைத்தலைப்புகள், தனிப்புள்ளிகள், எண்கள் முதலானவை.
- சிற்றேட்டிற்குத் தேவையான 'தொடர்புக்கு' அல்லது 'தொலைபேசி, மின்னஞ்சல்' முதலான கூறுகளை இணைத்திருத்தல்

**வினா 4:** ஆய்வுக்

- ஓரளவுக்கு முறைசார்ந்த மொழிப்பதிவைக் கையாளுதல்
- வாசகரைக் கவரும் வகையில் துடிப்புமிக்க நேரடியான மொழிநடைக் கையாளுதல்
- பொருத்தமான தலைப்பிட்டிருத்தல்
- மதிப்பீட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல்
- சிறு முன்னுரையும் தெளிவான முடிவுரையும் கொண்டிருத்தல்

**வினா 5:** நாட்குறிப்பு

- ஓரளவுக்கு முறைசார்ந்த அல்லது முறைசாரா மொழிப்பதிவைத் தொடர்ந்து கையாளுதல்
- தேதியைக் குறிப்பிட்டிருத்தல்
- தன்மையில் எடுத்துரைத்தல்
- பொருத்தமான முறையில் பதிவை நிறைவு செய்திருத்தல்
- இயல்புத்தன்மை நிறைந்த வெளிப்பாடாக இருத்தல்